1987 மார்ச் 5] [திரு. மு. ஜான் வின்செண்ட்]

கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், அரசினர் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கேட்டகிரி-1லிருந்து 6 வரை அதிலே பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. சில பிரிவுகளுக்கு உப்புத் தண்ணீர், மாற்றுத் திட்டம் இல்லை. சில ஊர்களுக்கு தேக்கத்தின் அடிப்படையில் கொடுக்க முடியாத பிரச்சினைகள். ஆகையால், தேக்கத்தினை மனதிலே கொள்ளாது எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு மாற்றுத் திட்டத்தை கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## 6. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

பேரவைக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல் கீழ்க்கண்டவாறு திருத்தியவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்:—

| | | |
|---|---|---|
| 6-3-1987 (வெள்ளிக்கிழமை) | .. | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி |
| 7-3-1987 (சனிக்கிழமை) | .. | விடுமுறை |
| 8-3-1987 (ஞாயிற்றுக்கிழமை) | .. | விடுமுறை |
| 9-3-1987 (திங்கட்கிழமை) | .. | பேரவைக் கூட்டம் இல்லை |
| 10-3-1987 (செவ்வாய்க்கிழமை) | .. | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை |
| 11-3-1987 (புதன்கிழமை) | .. | அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும் |

பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-00 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(மாலை 4–00.)

மாலை 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்— விவாதம் (தொடர்ச்சி).

*திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் நல சத்துணவுத் திட்டம், காலணி வழங்கும் திட்டம், வீடு கட்டும் திட்டம் போன்ற நல்ல திட்டங்களை வரவேற்கிறேன். ஆனால், பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பெரிய திட்டங்கள் எதுவும் எதிர்பார்த்தபடி ஆளுநர் உரையில் இல்லையென்றும் கூற விரும்புகிறேன். பருவ மழை பொய்த்ததன் காரணமாக வட ஆற்காடு மாவட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், அந்த மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, வறட்சிப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளக் கோருகிறேன். அதே நேரத்தில் வறட்சியை முன்னிட்டு நில வரி தள்ளுபடி செய்யக் கோருகிறேன். கால்நடைகளுக்குத் தேவையான வைக்கோலை மலிவு விலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டுகிறேன். சென்னை, மதுரை, கோவை ஆகிய மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்துவது பற்றியோ, அதேபோல் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவது பற்றியோ ஆளுநர் அவர்கள் ஏதும் குறிப்பிடவில்லை. தேர்தல் நடத்துவதில் இந்த அண்ணாவின் அரசு ஏன் தயக்கம் காட்டுகிறது என்பதை அறிய விழைகிறேன். தேர்தலை உடனடியாக நடத்தக் கோருகிறேன். தொழில் துறையில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்றும், அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையை நவீனமாக்க வேண்டும், விரிவுபடுத்த வேண்டும் என்ற ஒரு திட்டம் பரிசீலனையில் உள்ளதாகவும் மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 100% ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட 'டாமின்ட்கிரேனைட்' என்கிற தமிழ்நாடு கனிம நிறுவன தொழிற்சாலை மணலியில் தொடங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதை வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் தனியார் புதிய சிமெண்ட் தொழிற்சாலையை நிறுவ மைய அரசிடம் அனுமதி பெற்றும், சிமெண்ட் தொழிற்சாலைக்கு முக்கிய தேவைப் பொருளான சுண்ணாம்புக் கல்லுக்கு மைனிங் லைசன்சு கொடுப்பதிலே மாநில அரசு மிகவும் காலதாமதம் செய்து வருகின்றது. அதேபோல், சிமெண்ட் தொழிலுக்குத் தேவையான ஜிப்சம் கல்லுக்கு உரிமம் கேட்டும், ஏற்கனவே உரிமம் கிடைத்தவர்கள் உரிமத்தைப்